
# பண்பாட்டுக் கூடல் 9

இன்றைய உலகிற்குப் பண்பாட்டு ஒற்றுமை தேவைப்படுகிறது. தமிழ் இஸ்லாம் ஆகிய இரண்டு பண்பாடுகளையும் இணைக்க முற்பட்டவர் உமறுப்புலவர். இரண்டு பண்பாடுகள் இணைகின்றபோது சில விபத்துக்கள் ஏற்படலாம். ஏதேனும் ஒன்றின் அடிப்படை மறைந்து போகலாம்.அப்படி இணைகின்ற போது எந்தப் பண்பாட்டின் தனிச் சிறப்பும் மறைந்து போகக் கூடாது. அதன் உயிர்நிலை காப்பாற்றப்பட வேண்டும். உதாரணமாக, மேல் நாட்டுப் பண்பாட்டில் நாம் மயங்கி விடுகிறோம். அதன் சிறந்த, ஆழ்ந்த விஞ்ஞானப் போக்கில் ஈடுபடாமல் அவர்களின் உடை, உணவு, குடிப்பழக்கம் முதலியவற்றில் மயங்கி விடுகின்றோம். நம்முடைய பண்பாட்டின் அடிப்படையை நாம் உணர்வதில்லை. எனவே அதை மறந்து விடுகிறோம். ஆனால் பண்பாடு என்பது உயிர் போன்றது. பல்வேறு சூழ்நிலை காரணமாக வரலாற்றில் புதிய பண்பாடு ஒன்று உருவாவது உண்டு.



இஸ்லாம் , தமிழ் என்ற இரண்டு பண்பாடுகளும் தங்களின் தனித்தன்மையினை இழந்து போகாமல் இணைந்து அளவளாவி உலக அரங்கிற்கு உயர வேண்டும் என உமறுப் புலவர் கனவு கண்டார். அவரது தொண்டு பெரிய, சிறந்த தொண்டு. பண்பாட்டு ஒற்றுமை இல்லாமல்தான் இப்பொழுது உலகம் திண்டாடுகின்றது. இந்த இரண்டு பண்பாடுகளின்

ஒற்றுமையினை உமறுப்புலவர் ஒரு கவிஞனின் அழகிய கனவாகச்- செய்திருக்கிறார். துரதிஷ்டவசமாக அவரது தொண்டின் ஆழத்தை நாம் இன்னமும் உணர்ந்தபாடில்லை.

அவரது தொண்டின் சிறப்பை நாம் அறிகின்றபோது தமிழ், இஸ்லாம் ஆகிய இரண்டு பண்பாடுகள் இணைவதற்கு மட்டுமல்லாமல், உலகில் எந்த இரண்டு பண்பாடுகளும் இணைவதற்கு அது ஒரு வழிகாட்டியாக அமையும்.

சீறாப்புராணத்தின் முதற்பாடலை 'திருவினும் திருவாய்' என்று தொடங்குகின்றார். இந்தத் 'திரு'விற்கு 'லட்சுமி' என்று இந்த இடத்தில் பொருள் கொள்ளக் கூடாது. கல்வி, செல்வம், பண்பு இவையனைத்தையும் வளர்க்கும் பொருளாக அந்தத் திருவினைக் குறிப்பிடுகிறார். இந்த முதற் பாடல் தமிழ், இஸ்லாம் ஆகிய இரண்டு பண்பாடுகளின் ஒற்றுமையை மட்டும் கூறுவதன்று. உலகில் எல்லாப் பண்பாட்டினரும் இதை ஒப்புக்கொள்வர். பொருள் முதல் வாதிகள் கூட ஒத்துக்கொள்வர். உமறுப்புலவர் நூல் எழுதிய காலத்திலே அவருக்கு ஓர் இடர்ப்பாடு ஏற்பட்டது. பாத்திரங்களின் பெயர்கள் எல்லாம் அரபு மொழியில் அமைந்திருந்தன. இந்த அரபு மொழிப் பெயர்களை எல்லாம் தமிழ்ப் பண்பாட்டில் உறவாட விட ஒரு வழியினைக் கையாண்டார் உமறுப்புலவர். தமிழிலே சந்தவிருத்தம் என்ற ஒன்று உண்டு.

பிறமொழிச் சொற்கள் எல்லாம் சந்த குழிப்பிற்கு ஏற்ப வந்தால் அவை தமிழ்ச் சொற்கள் போலவே ஆகிவிடும் 'அபூபக்கர்' என்றால் 'இது என்ன தமிழா?' என்று கேட்போம் தபுதக்க என்ற சந்தம் அமைகின்றபோது 'அபூபக்கர்' என்று வந்து விடும். அந்தச் சொல்லுக்கு ஏற்ப பாடலுக்கான சந்தக் குழிப்பை எடுக்கின்றபோதே 'புரசைக் கடக்கரிகள்' என்று எடுத்துவிடுகிறார்.

புரசைக் கடக்கரிகள் நிரை தட்டு அறக் குபிரர்.
புடவியைப் படக் கடவியே
சரகுற்ற நற்பதவி வழியிற் புகுத்தி உயர்
தலைமைக்கு வைத்த பெரியோர்
பிரசத் துளித்திவலை சிதறிக் கிடக்கும் இரு
பிணையற் புயத்து நயினார்
அரசுக்கு வைத்த நெறி வரிசைக்கு மிக்க துரை
அபூபக்கரைப் புகலுமாம்.

அதாவது இறைமறுத்து இருள் நெறியில் இருந்தவர்களின் யானைப் படைகள் சிதறுண்டு அழியும் வண்ணம் போரிட்டு அவர்களைச் சன்மார்க்க ஒழுங்கினை உணரவைத்து மேலான தலைமைப் பதவியை அடையச் செய்தவர்களும், தேன்துளிகள் சிதறும் மலர்மாலைகளை அணிந்த தோள்களையுடையவர்களுமான முகமது நபியவர்கள் நிர்ணயித்த நெறியின்படி முதல் தலைவராக வந்த அபூபக்கர் அவர்களைப் போற்றுவோமாக. தபுதக்க

என்கின்றபோது அபூபக்கர் என்பது தமிழ்ச் சொல்லாகி விடுகிறது. இந்தக் குறிப்போடு சீறாப்புராணத்தைப் படித்தால் அரபுச் சொற்கள் தமிழ்ச் சொற்கள் போன்று காதுக்கும் உள்ளத்திற்கும் இனிக்கும். இஸ்லாமிய வரலாற்றில் அலி அவர்கள் சிறந்த வீரர். அந்தப் பெயருக்குத் தமிழில் வேறு பொருளும் கொள்ளலாம். அவ்வாறு பொருள் கொண்டு விடக் கூடாது என்றும் புலவர் 'அலி' என்று வருகின்ற இடத்தில் எல்லாம் 'புலி அலி' என்றே சொல்லுகின்றார்.

பருப்பதராஜனைக் கண்ணுற்ற படலத்தில் ஒரு காட்சி தம் கொள்கையை பரப்பச் சென்ற நபிகளார் மீது தாயிப் நகர மக்கள் கல்லெறிந்து விரட்டினர். அப்பொழுது மலைக்கரசனானவர்(பருவதராஜன்) அவர்களை அழிப்பதற்கு நபிகளாரின் அனுமதிகேட்டார். அதற்கு நபிகளார் "வேண்டாம், அவர்களை அழிக்கவேண்டாம்"

"இக்கணத்தில் நல்வழிப் படார் எனில் இவர் பயந்த
மக்களாயினும் நல்வழிக்கு ஒழுகுவர்."

என்று சொல்லிய பரந்த மனப்பான்மையை எண்ணும்போது இயேசுவில் உருகிய உள்ளம் இங்கேயும் உருகுகிறது.

அடுத்து, தசைக்கட்டியைப் பெண்ணுருவமைத்த படலம் இருக்கின்றது. ஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியதாக ஒருகதை தமிழ் நாட்டிலும் உண்டு. ஒவ்வொரு கவிஞனுக்கும் பெண்ணின் அழகை எங்காவது முழுவதும் வருணிக்கின்ற ஒரு கடப்பாடு உண்டு. அது வெறும் பெண் வருணனை அல்ல. அது அழகின் வடிவம். அது தெய்வீகமாக வர வேண்டும். சேக்கிழார் பாடும் பூம்பாவை வருணனை ஒரு தெய்வீகக் காட்சியாய், ஆண்டவனின் அருளே பொங்கி வருவது போல் அமைந்துள்ளது. இங்கே, சீறாப்புராணத்தில் தசைக் கட்டியிலிருந்து பெண்ணுருவம் வருகின்றது. மெல்ல மெல்ல எழுகின்றது. முதலில் கூந்தல் தெரிகின்றது. பிறகு புருவம் தெரிகிறது. மூக்கு, கழுத்து, கால் வரை படிப்படியாகத் தெரிகின்றன. அழகான வருணனைப் பகுதி இது. பிற காவியங்களின் அழகான பகுதிகளை மனதில் வாங்கிக்கொண்டு இதைப் பார்க்க வேண்டும். சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரையுள்ள நல்லவையெல்லாம் எடுத்துக் கொண்டு நபிகள் பெருமானின் வரலாற்றை உமறுப்புலவர் பாடியிருக்கிறார். என்னுடைய வருத்தம் எல்லாம் இருபெரும் பண்பாடும் இணைந்து அளவளாவி ஒன்றையொன்று வளர்த்து உலகத்தையே வளர்க்க வேண்டும் என்ற கவிஞனின் பெரும் கனவைத் தமிழகமும் இஸ்லாமிய உலகமும் அறியவில்லையே என்பது தான்.

எத்தனையோ இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் உள்ளன. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல் நல்ல பதிப்பே ஆகும். இஸ்லாமிய சூஃபி கோட்பாட்டையும் நம் நாட்டு வேதாந்தக் கருத்தையும் இணைத்துப் பாடுகிறார். அவர் வியக்கத்தக்க

நிலை அது. அது இன்னும் அம்மானை, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலிய இஸ்லாமிய இலக்கியங்கள் நிறைய இருக்கின்றன. இவற்றைப் படிக்கின்ற இஸ்லாமியத் தமிழ் மகன் இவற்றின் ஆழ்பொருளையெல்லாம் கண்டுணர வேண்டும். தமிழ் மாணவர்கள் இவற்றையெல்லாம் திரட்டிக் காத்து சுவைத்து மகிழ வேண்டும். இப்படிப்பட்ட நிலையினை நாம் அடைந்தால் இந்த இருபதாம் நூற்றாண்டின் (ஏன் இருபத்தொராம் நூற்றாண்டின்) அல்லல்களையெல்லாம் நீக்கமுடியும். இஸ்லாத்தையும் தமிழையும் ஒன்று படுத்திய புலவர்களின் தொண்டையெல்லாம் வாழவைக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

**-சீறா ஆய்வுத்திரட்டு-**



**டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| அபூபக்கர் | - | நபிகளாரின் தோழர்களில் ஒருவர் |
| அலி | - | நபிகளாரின் மருமகன் |
| புரசை | - | யானையின் கழுத்தில் உள்ள கயிறு. |
| குபிரர் | - | இறை மறுப்போர் |
| சரகு | - | சன்மார்க்க ஒழுங்கு |
| பிரசம் | - | தேன் |
| நபி | - | இறைத்தூதர் |
| தாயிப் | - | இஸ்லாமிய மக்காவிற்கு அருகிலுள்ள நகர் |
| சூஃபி | - | இஸ்லாமிய வேதாந்தி |

## கிரகித்தற் பயிற்சி

1. *பாடத்தில் வலியுறுத்தப்படும் இரு பண்பாடுகள் எவை ?*
2. *நாம் எதற்கு மயங்கி விடுவதாகக் கட்டுரையாசியர் குறிப்பிடுகிறார்?*
3. *உமறுப்புலவரின் கனவு என்ன என்று கூறப்படுகிறது?*
4. *உமறுப்புலவர் நூல் எழுதிய காலத்தில் அவருக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் எவை?*
5. *சங்ககாலம் தொடங்கி தமது காலம் வரையுள்ள நல்லனவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு நபிகள் பெருமான் வரலாற்றை எல்லாம் உமறுப் புலவர் எவ்வாறு பாடியுள்ளார்?*
6. *கட்டுரையாசிரியர் மாணவர் சமுதாயத்திற்குக் கூறும் செய்தியை விபரித்து எழுதுக.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : செய்தி அறிக்கை ஒன்றை செவிமடுத்து குழுவில் உள்ளவர்களுக்குக் கூறுக.

செயற்பாடு 2 : கதைகள், பாடல்கள், நகைச்சுவைகள், விடுகதைகள், விளம்பரங்கள், நாடகங்கள் முதலியவற்றில் நீங்கள் இரசித்துச் சுவைத்த பகுதிகளை நண்பருடன் கலந்துரையாடுக.

செயற்பாடு 3 : பண்பாட்டுக் கூடல் என்ற கட்டுரையில் வரும் இரண்டாவது பந்தியை வாசித்து, அதன் மையக் கருத்தைக் கூறுக.

செயற்பாடு 4 : உமது பாடசாலையில் நடந்த சமய நிகழ்வு ஒன்றைப் பற்றி பந்தி ஒன்று வரைக

## மொழிவளம்

### ▶ அணிகள்

நாம் அணியும் ஆபரணங்கள் எவ்வாறு எம்மை அழகு படுத்துகின்றனவோ, அவ்வாறு தான் இலக்கியத்தை அணிகள் அழகு படுத்துகின்றன. அணிகளை இனங்கண்டு அதனைச் சுவைக்கப் பழகிக்கொள்வோமாயின் இலக்கியம் இனிக்கும்.

அணிகள் பல வகைப்படும். அவற்றுள் உவமை, உருவகம் ஆகியன குறிப்பிடத்தக்கன-வாகும்

### உவமை

நமக்குப் பிடித்தவற்றையும் பிடிக்காத வற்றையும் பற்றிக் கூறும் போது உவமைகளைப் பயன்படுத்தத் தொடங்கி விடுகிறோம்.

உயரமானவரைப் பார்த்து 'தென்னை மரம் போல் உயரமாய் இருக்கிறாய்' என்றும் வெயிலின் உஸ்ணத்தை சகிக்க முடியாதபோது 'நெருப்பு மாதிரி வெயில் கொளுத்துகின்றது' என்றும் கூறுகின்றோம். சிலர் மருந்து அருந்தி விட்டு 'பாகற்காய் போல இருக்கிறது' என்று கூறுவார்கள்.

இங்கு உயரமானவரைத் தென்னை மரத்திற்கும், வெயிலை நெருப்பிற்கும், கசப்பை பாகற்காயிற்கும் ஒப்பிட்டிருப்பதனைக் காண முடிகிறது. உவமை என்றால் ஒன்றை இன்னொன்றுக்கு ஒப்பிட்டுக் கூறுவது என்று சொல்லலாம்.

நாணற் பூப்போல
நரைத்த கிழவனுக்கு
குங்குமப் பூப்போல - இந்த
குமரிதானோ வாழுறது

-நாட்டார் பாடல்-

இங்கு கிழவனின் நரைத்த மயிர் நாணற் பூவுக்கும், அழகிய சிவந்த குமரிப் பெண் குங்குமப் பூவுக்கும் ஒப்பிடப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது.
நாணற் பூ தூய வெள்ளை நிறமுடையது. கிழவனின் தலைமயிரின் நிறம் மனதில் தோன்றுகிறதல்லவா ? குங்குமப்பூ அழகிய சிவந்த நிறமுடையது. குமரியின் அழகிய தோற்றம் மனதில் தோன்றுகிறதல்லவா ? ஜோடிப் பொருத்தம் எப்படி என்பதை தோழி கிண்டல் செய்வதாகப் பாடப்படுகிறது இப்பாடல்

# இலக்கணம்

## ▶பெயர்ச் சொற்கள்

**பின்வரும் பாடலை வாசித்துப் பார்ப்போம்.**

மணல் வீடு வெண்மணல் வீடு
ஊர் மத்தியில்- எல்லோரும்
ஆடுதல் பாடுதல் செய்து கட்டிய வீடு
கோடையும் மாரியும் கடந்து
கெடுதல் இன்றி இருந்த வீடு - இப்போது
உதிர்ந்த பூவாய்ப் போன வீடு.

இப்பாடலில் இடம்பெறும் பின்வரும் சொற்களைக் கவனிப்போம்.

1. மணல்
2. வெண்(மை)
3. ஆடுதல் , பாடுதல் , கெடுதல்
4. கோடை , மாரி
5. பூ
6. ஊர் , வீடு

இச் சொற்கள் ஒன்றின் பெயரைக் குறித்து வருகின்றன.
இவ்வாறு ஒன்றின் பெயரைக் குறித்து வரும் பெயர்களைப் பெயர்ச் சொற்கள் என்போம்.

நமது வகுப்புடன் தொடர்புடைய பெயர்ச் சொற்களைப் பட்டியற்படுத்துவோம்.

| | | |
|---|---|---|
| மாணவர்கள் | மேசைகள் | கதவு |
| ஆசிரியர்கள் | புத்தகங்கள் | வாசல் |
| அதிபர் | நேர அட்டவணை | கரும்பலகை |
| தும்புத்தடி | கதிரைகள் | யன்னல் |

## பெயர்ச் சொற்களின் பண்புகள்

ஏற்கனவே நாம் படித்த பாடலில் இடம்பெறும் பெயர்ச் சொற்களை மீண்டும் நினைவு படுத்துவோம்.

மணல் வீடு

வெண் மணல் வீடு

மணல் வீடு என்றால் மணலால் கட்டிய வீடு என்று பொருள். மணலால் என்ற சொல்லில் இடம் பெறும் மணல் + ஆல் = மணலால் என்று அமைகிறது. இங்கு ஆல் என்பது மூன்றாம் வேற்றுமை உருபாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பெயர்ச் சொற்களின் பண்புகளில் ஒன்று வேற்றுமை உருபை ஏற்பதாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மணல் | + | ஐ | = | மணலைக் | கொட்டினான். |
| மணல் | + | ஆல் | = | மணலால் | கட்டினான். |
| மணல் | + | ஒடு | = | மணலோடு | அரிசி கலந்துள்ளது. |

பெயர்ச் சொற்கள் பெயரடைகளை ஏற்று வரும்.

வெண்மணல் என்றால் வெள்ளை நிறமான மணல் என்று பொருள். மணல் என்ற சொல்லுக்கு முன்னால் வரும் வெண்(மை) என்பது மணலின் பண்பைக் குறிக்கிறது. வெண்மை என்ற பண்புப் பெயர் மணலிற்கு அடையாக வந்துள்ளது.

வெண்மணல் , சிறு மணல் , நல்ல மணல் என்பன பெயரடைகளாகும்.

## பயிற்சி

**01. பின்வரும் வசனங்களில் இடம்பெறும் பெயர்ச் சொற்களை இனங்கண்டு எழுதுவோம்.**

1) பசு சாதுவான விலங்காகும்.

2) சிறிய வண்ணத்துப் பூச்சிகள் பறந்து சென்றன.

3) அழகிய மயில் ஆடியது.

**02. பின்வரும் வாக்கியங்களில் இடம் பெறும் பெயரடைகளை இனங்கண்டு எழுதுவோம்.**

1) எழில்மிகுஇலந்னி எமது நாடாகும்.

2) இனிமையலில் குமலில் சாந்தன் சத்தமாகரேசினான்.

3) அழகானமயில்அழகன ஆரியது.

**03. சுருக்கமாக விடை தருக.**

1) பெயர்ச்சொற்களின் பண்புகள் எவை?

2) அப்பண்புகள் அமையுமாறு ஐந்து வாக்கியங்கள் எழுதிக் காட்டுக.